Ours bank with
Bank of Baroda

மதுரை மணி
Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ் ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road, Madurai-625 001.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 82 | உள்ளூர் - 23.03.2026 | திங்கள் | விலை ரூ.3/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
| Madurai Edition | *Vol 55 | * Issue 82 | வெளியூர் - 24.03.2026 | செவ்வாய் | Price Rs. 3/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |

இந்த ராசிக்காரர்களுக்கு இனி வெற்றி..!

எஸ்.எஸ்.பி.–ல் 827 கான்ஸ்டபிள் காலியிடங்கள்!

ஒருவாரம் தான்.. அமலுக்கு வரும் புதிய மாற்றங்கள்?

அனல் பறக்கும் தேர்தல் செய்திகள்!

# தியாகிகள் தினம்: பகத்சிங், ராஜகுரு, சுக்தேவுக்கு பிரதமர் மோடி அஞ்சலி!

புதுடில்லி, மார்ச். 23–

தியாகிகள் தினத்தையொட்டி பகத் சிங், ராஜ்குரு மற்றும் சுக்தேவ் ஆகியோரின் வீரத்தைப் போற்றி பிரதமர் மோடி தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

சுதந்திரப் போராட்ட வீரர்கள் பகத் சிங், சிவராம் ராஜ்குரு மற்றும் சுக்தேவ் தாப்பர் ஆகிய மூவரும் 1931ம் ஆண்டு மார்ச் 23ம் தேதி லாகூர் சிறையில் தூக்கிலிடப்பட்டனர். இவர்களின் தியாகத்தைப் போற்றும் வகையில், ஆண்டுதோறும் மார்ச் 23ம் தேதி தியாகிகள் தினம் கடைபிடிக்கப்படுகிறது.

இந்த நிலையில், தியாகிகள் தினத்தையொட்டி, பகத் சிங் உள்ளிட்டோரை நினைவுகூர்ந்து



பிரதமர் மோடி எக்ஸ் தளத்தில் ஒரு பதிவை போட்டுள்ளார்.

அதில், 'பாரத மாதாவின் வீரப்புதல்வர்களான பகத் சிங், ராஜ்குரு மற்றும் சுக்தேவ் ஆகியோரை இன்று நாம் மிகுந்த மரியாதையுடன் வணங்குகிறோம். தேசத்திற்காக அவர்கள் செய்த உயரிய தியாகம் நமது நினைவில் என்றும் நீங்காது இருக்கும். இளம் வயதிலேயே, அசாதாரணமான துணிச்சலையும், இந்தியாவின் சுதந்திரத்திற்காக அசைக்க முடியாத அர்ப்பணிப்பையும் வெளிப்படுத்தினர்.

காலனித்துவ ஆட்சிக்கு அஞ்சாமல், தங்கள் உயிரை விட தேசமே மேலானது என்ற உறுதியுடன் தங்களின் பாதையை தேர்ந்தெடுத்தனர். நீதி, தேசபக்தி மற்றும் அச்சமின்மை போன்றவையால் இன்றும் கோடிக்கணக்கான இந்தியர்களின் மனதில் தேசப்பற்று எனும் நெருப்பை மூட்டிக்கொண்டிருக்கின்றன, இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

# தமிழ்ப்புதல்வன் திட்டம் உயர்கல்விக்கு ஊன்றுகோல்: முதல்வர் ஸ்டாலின் பெருமிதம்!

சென்னை, மார்ச். 23–

உயர்கல்விக்கு ஊன்றுகோலாக அமைந்துள்ளது தமிழ்ப்புதல்வன் திட்டம் என முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தமிழ்ப்புதல்வன் திட்டத்தால் பயனடைந்தவர்களின் வீடியோ சமூக வலைதளத்தில் வெளியிட்டு, முதல்வர் ஸ்டாலின் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது: இந்தத் தம்பி மட்டுமல்ல, இதுபோல லட்சக்கணக்கான தம்பிகளின் உயர்கல்விக்கு ஊன்றுகோலாக அமைந்துள்ளது தமிழ்ப்புதல்வன்.



இவர்களின் கல்வி தொடர, எளிய குடும்பங்களின் அடுத்த தலைமுறைகள் செழிக்க திமுகவுக்கு ஒட்டளிக்க வேண்டும். திராவிட மாடல் ஒன்றாக வெல்வோம். இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளார்.

**தமிழ்ப்புதல்வன் திட்டம்**

தமிழ்ப்புதல்வன் திட்டம் என்பது 6ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை அரசுப் பள்ளிகள் மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் தமிழ் வழியில் பயின்று, உயர்கல்வி படிக்க, கல்லூரி சேரும் மாணவர்களுக்கு மாதந்தோறும் ரூ.1,000 உதவித்தொகை வழங்கும் தமிழக அரசின் திட்டமாகும். புதுமைப்பெண் திட்டத்தைப் போன்று, மாணவர்களின் கல்விச் சுமையைக் குறைத்து உயர்கல்வியை ஊக்குவிக்க இத்திட்டம் 2024ம் ஆண்டு ஆகஸ்ட் 9ம் தேதி தொடங்கப்பட்டது.

# இன்னும் ஒருவாரம் தான்.. அமலுக்கு வரும் புதிய மாற்றங்கள்?

சென்னை, மார்ச். 23–

ஏப்ரல் 1 ஆம் தேதி புதிய நிதியாண்டு பிறக்கவுள்ள நிலையில், ஏடிஎம் விதிகளில் வரக்கூடிய மாற்றங்கள், ரேஷன் கார்டு அட்டைதாரர்களுக்கான குட் நியூஸ், டீக்கடை மற்றும் ஹோட்டல்களுக்கு விநியோகிக்கப்படும் கேஸ் சிலிண்டர் அப்டேட் மற்றும் ஆதார் அட்டையில் நீங்க செய்யக்கூடாத சில முக்கியமான விஷயங்கள் என ஏப்ரல் 1 முதல் புதிய விதிகள் குறித்து பொது மக்கள் அனைவரும் கண்டிப்பாக தெரிந்து கொள்ள வேண்டிய மிக முக்கியமான அப்டேட்கள் மற்றும் தகவல்கள்

**வணிக சிலிண்டர் குறித்து முக்கிய அப்டேட்**

டீக்கடை முதல் பெரிய ஹோட்டல் வரை பிசினஸ் செய்பவர்களுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தி வெளியாகியுள்ளது. சமீபகாலமாக கமர்சியல் (வணிகப் பயன்பாடு) கேஸ் சிலிண்டர்களுக்கு நிலவி வந்த தட்டுப்பாட்டினால் சிறு தொழில்கள் கடுமையாக பாதிக்கப்பட்டன. இதனையடுத்து தமிழகம் உள்ளிட்ட மாநிலங்களுக்கு வழங்கப்படும் வணிக சிலிண்டர்களின் அளவை 50 சதவீதமாக மத்திய அரசு உயர்த்தியுள்ளது. எனவே இனி வரும் காலங்களில் பண்டிகை சீசன்கள் வந்தாலும் தட்டுப்பாடின்றி சிலிண்டர்கள் கிடைக்கும். இதனால் சிறு தொழில்கள் மற்றும் ஹோட்டல் உரிமையாளர்கள் நிம்மதி அடைந்துள்ளனர்.




**ரேஷன் கார்டு வைத்திருப்பவர்களுக்கு குட் நியூஸ்**

ரேஷன் கடைகளில் கூட்ட நெரிசலைத் தவிர்க்கவும், ரேஷன் கிடங்குகளை முறைப்படுத்தவும் மத்திய அரசு ஒரு புதிய திட்டத்தைக் கொண்டு வந்துள்ளது. இதன்மூலம் ரேஷன் கடையில் ஒவ்வொரு மாதமும் கியூவில் நின்று பொருள் வாங்குபவர்களுக்கு பெரும் நிம்மதியை ஏற்படுத்தி உள்ளது.

வரும் 2026 ஏப்ரல் மாதத்தில் இருந்து, மூன்று மாதங்களுக்கு (ஏப்ரல், மே, ஜூன்) தேவையான ரேஷன் பொருட்கள் ஒரே தவணையாக வழங்கப்பட உள்ளன. கோதுமை கொள்முதல் தொடங்க உள்ளதால், மத்திய அரசின் கிடங்குகளில் உள்ள பழைய இருப்புகளைக் காலி செய்ய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 2025–ல் நடத்தப்பட்ட சோதனையில் 41 லட்சம் போலி கார்டுகள் நீக்கப்பட்டுள்ளன. தற்போது 99% ஆதார் இணைப்பு முடிந்துள்ளதால் விநியோகம் மிகவும் வெளிப்படையாக இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

ஏடிஎம் (ATM) மற்றும் வங்கி விதிகள் மாற்றம்:

புதிய நிதியாண்டு தொடங்குவதால், வங்கிப் பரிவர்த்தனைகளில் சில கட்டுப்பாடுகள் அமலுக்கு வருகின்றன. HDFC வங்கி, பஞ்சாப் நேஷனல் வங்கி (PNB) மற்றும் ஜியோ பேமெண்ட் வங்கி போன்றவற்றில் புதிய வசதி மற்றும் சில பரிவர்த்தனை மாற்றம் மேற்கொள்ளப்படவுள்ளது.

எச்டிஎஃப்சி (HDFC) இலவச பரிவர்த்தனை: எச்டிஎஃப்சி கார்டு இல்லாமல் யூபிஐ (UPI) மூலம் ஏடிஎம்–ல் பணம் எடுக்கும் வசதி, இனி உங்கள் மாதாந்திர இலவச பரிவர்த்தனை கணக்கில் சேர்க்கப்படும். இலவச லிமிட் (HDFC ஏடிஎம்–ல் 5 முறை, மற்றவற்றில் 3–5 முறை) தாண்டினால், ஒருமுறை பணம் எடுக்க ரூ.23 பிளஸ் வரி வசூலிக்கப்படும்.

பஞ்சாப் நேஷனல் வங்கி (PNB): பாதுகாப்பு காரணங்களுக்காக டெபிட் கார்டு மூலம் ஒரு நாளைக்கு எடுக்கும் பண வரம்பை ஒரு லட்சத்திலிருந்து ரூ.50000 – ரூ.75,000 ஆகக் குறைத்துள்ளது.

ஜியோ பேமெண்ட் வங்கி: அங்கீகரிக்கப்பட்ட ஏஜெண்டுகளிடம் சென்று கியூஆர் கோடை (QR Code) ஸ்கேன் செய்து கைமாற்றாக ரொக்கப் பணம் பெற்றுக்கொள்ளும் புதிய வசதியை அறிமுகம் செய்கிறது.

**ஆதார் கார்டு லேட்டஸ்ட் அப்டேட்:**

ஆதார் கார்டில் சில திருத்தங்களை உங்கள் வாழ்நாளில் குறிப்பிட்ட முறை மட்டுமே செய்ய முடியும் என்று UIDAI தெரிவித்துள்ளது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

பிறந்த தேதி (DOB): வாழ்நாளில் ஒரே ஒரு முறை மட்டுமே மாற்ற முடியும் (சரியான சான்றிதழ் அவசியம்).

பாலினம் (Gender): இதுவும் வாழ்நாளில் ஒரே ஒரு முறை மட்டுமே திருத்த முடியும்.

பெயர் மாற்றம்: வாழ்நாள் முழுவதும் இரண்டு முறை மட்டுமே மாற்றிக்கொள்ள முடியும். எத்தனை முறை: முகவரி, மொபைல் எண், கைரேகை, கண் கருவிழி மற்றும் புகைப்படத்தை எத்தனை முறை வேண்டுமானாலும் அப்டேட் செய்து கொள்ள லாம். நிர்ணயிக்கப்பட்ட வரம்பைத் தாண்டி திருத்தம் செய்ய வேண்டுமென்றால், மண்டல அலுவலகத்திற்கு (Zonal Office) நேரில் சென்று சிறப்பு அனுமதி பெற வேண்டும்.

# திடீர் திருப்பம்

# திரும்பப் பெற்ற மத்திய அரசு...! விமானக் கட்டுப்பாடு நீக்கம்

## மார்ச் 23 முதல்!!

புதுடெல்லி, மார்ச். 23–

உள்நாட்டு விமானக் கட்டணங்கள் மீது தற்காலிக உச்சவரம்புகளை விதித்து 3 மாதங்களுக்கும் மேலான நிலையில், அந்தக் கட்டுப்பாட்டை நீக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது. கடந்த ஆண்டு டிசம்பரில் IndiGo விமானச் சேவையில் ஏற்பட்ட இடையூறுகளைத் தொடர்ந்து, அரசாங்கம் இந்த உச்சவரம்புகளை விதித்திருந்தது.

சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகம் வெளியிட்ட உத்தரவின்படி, விமானக் கட்டண உச்சவரம்புகளை நீக்கும் நடவடிக்கை மார்ச் 23, 2026 முதல் நடைமுறைக்கு வரும்.

மேற்கு ஆசியப் பிராந்தியத்தில் நிலவும் மோதல்கள் காரணமாக, சர்வதேச வழித்தடங்களில் விமான நிறுவனங்கள் குறிப்பிடத்தக்க செயல்பாட்டு இடையூறுகளைச் சந்தித்து வரும் ஒரு காலகட்டத்தில் இந்த அறிவிப்பு வெளியாகியிருப்பது முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

அந்த உத்தரவில், விமான நிறுவனங்கள் கட்டண நிர்ணயத்தில் ஒழுங்குமுறை யைக் கடைப்பிடிக்க வேண்டும் என்றும், பொறுப்புணர்வுடன் செயல்பட வேண்டும் என்றும் அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது.

"விமானக் கட்டணங்கள் நியாயமானதாகவும், வெளிப்படையானதாகவும், சந்தை நிலவரங்களுக்கு ஏற்றதாகவும் இருப்பதை விமான நிறுவனங்கள் உறுதி செய்ய வேண்டும்; மேலும் பயணிகளின் நலன்கள் எவ்விதத்திலும் பாதிக்கப்படாமல் இருப்பதையும் அவர்கள் உறுதி செய்ய வேண்டும்," என்று அந்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




**பயணிகளுக்கும் விமான நிறுவனங்களுக்கும் இதன் பொருள் என்ன?**

இந்த நடவடிக்கை பயணிகளை நேரடியாகப் பாதிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது; விமானக் கட்டண உச்சவரம்பு நீக்கப்படுவதால், விமானப் பயணச் செலவுகள் அதிகரிக்கக்கூடும்.

அதிகரித்து வரும் செலவுகளைச் சமாளிக்கப் போராடி வரும் விமான நிறுவனங்கள், இனி தேவை மற்றும் அளிப்பு (demand and supply) அடிப்படையில் தங்கள் கட்டணங்களைச் சுதந்திரமாக மாற்றியமைத்துக்கொள்ள முடியும். இதன் விளைவாக, விடுமுறை நாட்கள், பண்டிகைக் காலங்கள் மற்றும் கடைசி நிமிட முன்பதிவுகளின்போது விமானக் கட்டணங்கள் கணிசமாக உயரக்கூடும்.

எனினும், பயணிகளின் கூட்டம் குறைவாக இருக்கும் (off–peak) காலங்களில் விமானக் கட்டணங்கள் குறையவும் வாய்ப்புள்ளது என்பதை நினைவில் கொள்வது அவசியம்.

இது விமான நிறுவனங்களுக்கு எவ்வாறு உதவும்?

இந்த நடவடிக்கை, விமான நிறுவனங்கள் தங்கள் வருவாயைப் பெருக்கிக்கொள்ளும் வகையில் 'மாறும் கட்டண நிர்ணய முறையை' (dynamic pricing) பயன்படுத்திக்கொள்ளும் சுதந்திரத்தை வழங்குகிறது. இடையூறுகள் நிறைந்த காலகட்டங்களில் இழந்த வருவாயை ஈடுசெய்யவும் இது அவர்களுக்கு உதவும்.

**விமானக் கட்டணப் போக்கை கண்காணிக்கும் அமைச்சகம்**

இருப்பினும், விமானக் கட்டணப் போக்குகளைத் தாங்கள் நிகழ்நேர அடிப்படையில் (real–time) கண்காணித்து வருவதாகவும், விமான நிறுவனங்கள் கட்டண நிர்ணயத்தில் ஒழுங்குமுறையைக் கடைப்பிடித்துப் பொறுப்புணர்வுடன் செயல்பட வேண்டும் என்றும் அமைச்சகம் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது. குறிப்பாக, அதிகப்படியான தேவை நிலவும் காலங்கள், இடையூறுகள் அல்லது அவசரச் சூழல்களின்போது, விமானக் கட்டணங்கள் வரம்பிற்கு மீறி அல்லது நியாயமற்ற முறையில் உயர்த்தப்படுவது கண்டறியப்பட்டால், அது மிகவும் தீவிரமாக அணுகப்படும் என்றும் அமைச்சகம் வலியுறுத்தியுள்ளது.

"விமானக் கட்டணங்கள் நியாயமானதாகவும், வெளிப்படையானதாகவும், சந்தை நிலவரங்களுக்கு ஏற்றதாகவும் இருப்பதை விமான நிறுவனங்கள் உறுதி செய்ய வேண்டும்; மேலும் பயணிகளின் நலன்கள் எவ்விதத்திலும் பாதிக்கப்படாமல் இருப்பதையும் அவர்கள் உறுதி செய்ய வேண்டும்," என்று அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

விமானப் பயணத் தொலைவு ஒரு வழிப் பயணத்திற்கான அதிகபட்சக் கட்டண வரம்பு

| | |
|---|---|
| 500 கி.மீ வரை | ரூ. 7,500 |
| 500 1,000 கி.மீ | ரூ. 12,000 |
| 1,000 1,500 கி.மீ | ரூ. 15,000 |
| 1,500 கி.மீ–க்கு மேல் | ரூ. 18,000 |

# சாத்தான்குளம் தந்தை - மகன் லாக்கப் வழக்கு தீர்ப்பு!



தூத்துக்குடி, மார்ச். 23–

தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளத்தைச் சேர்ந்த வியாபாரி ஜெயராஜ், அவரது மகன் பென்னிக்ஸ் ஆகியோரை கடந்த 2020–ம் ஆண்டில் போலீசார் தாக்கியதில் படுகாயம் அடைந்து அடுத்தடுத்து இறந்தனர். இந்த வழக்கை சி.பி.ஐ. விசாரித்தது. இதில் அப்போதைய போலீஸ் இன்ஸ்பெக்டர் ஸ்ரீதர், சப்–இன்ஸ்பெக்டர்கள் ரகு கணேஷ், பாலகிருஷ்ணன் உள்பட 9 போலீசார் கைதாகி மதுரை மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர். நாடு முழுவதும் பரபரப்பை ஏற்படுத்திய சாத்தான்குளம் சம்பவத்தில் (மார்ச். 23) மாலை 4 மணிக்கு தீர்ப்பு வழங்கப்பட இருப்பது பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தி உள்ளது.

# பங்குனி உத்திரம்: சபரி அய்யப்பன் கோவிலில் கொடியேற்றம்...!



திருவனந்தபுரம், மார்ச். 23–

சபரிமலை ஐயப்பன் கோயிலில் பங்குனி உத்திரம் ஆராட்டு திருவிழா ஒவ்வொரு ஆண்டும் 10 நாட்கள் அதிவிமரிசையாக கொண்டாடப்படுவது வழக்கம். அதன்படி பங்குனி உத்திரவிழாவுக்காக கோயிலில் கொடி ஏற்றப்பட்டது.

ஏப்ரல் 1ந்தேதி பங்குனி உத்திரம் திருவிழா கொண்டாடப்பட உள்ளதால், பங்குனி உத்திர திருவிழா மற்றும் ஆராட்டு விழாவை முன்னிட்டு அய்யப்பன் கோவிலில் (இன்று) காலை கொடியேற்றத்துடன் விழா தொடங்கியது.

# அதிமுக கூட்டணியில் உடன்பாடு ? சென்னை வந்தார் பியூஸ் கோயல்...!




சென்னை, மார்ச். 23–

தமிழக சட்டமன்ற தேர்தலுக்கு இன்னும் சரியாக 30 நாட்கள் மட்டுமே உள்ள நிலையில், பாஜக தேர்தல் பொறுப்பாளர் பியூஸ் கோயல் தமிழகம் வந்துள்ளார். தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகள் தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தையை சுதந்திரமாக நடத்துவோம் எனவும் பியூஸ் கோயல் கூறியுள்ளார்.இன்று காலை முதல் கூட்டணி கட்சிகளுக்கு ஒதுக்கப்படவுள்ள தொகுதிகளின் பட்டியல் வெளியாகவுள்ளது. மேலும் எந்த எந்த தொகுதிகள் என்ற பட்டியலும் வெளியாகும் என கூறப்படுகிறது. அடுத்தாக இன்னும் ஒரு சில நாட்களில் வேட்பாளர்களின் பட்டியலும், தேர்தல் அறிக்கையும் வெளியாக இருப்பதாக அதிமுக வட்டார தகவலாக உள்ளது.

தலையங்கம் மதுரை மணி

திங்கட்கிழமை 23.03.2026

விசுவாவசு தமிழ் வருடம்

பங்குனி மாதம் 09-ம் தேதி

## வெளிநாட்டு முதலீட்டாளர்கள்..!! மீண்டும் வருவார்களா?




இந்தியப் பங்குச் சந்தைகளில், வெளிநாட்டுப் போர்ட்ஃபோலியோ முதலீட்டாளர்கள் (FPIs) மார்ச் 2026–ல் இதுவரை ரூ.88,180 கோடி (சுமார் $9.6 பில்லியன்) தொகையை திரும்பப் பெற்றுள்ளனர்.

NSDL தரவுகளின்படி, மார்ச் 20 வரை ஒவ்வொரு வர்த்தக நாளிலும் நிகர விற்பனையாளர்களாகவே இருந்தனர், இது சமீப காலத்தின் மிகப்பெரிய விற்பனைப் போக்காகும். இந்த வெளியேற்றம் அக்டோபர் 2024–ன் ரூ94,017 கோடி சாதனையை விட சற்று குறைவு. பிப்ரவரியில் ரூ.22,615 கோடி (17 மாதங்களில் அதிகபட்சம்) முதலீடு செய்யப்பட்ட பிறகு, முதலீட்டாளர்களின் மனநிலையில் ஏற்பட்ட இந்த கூர்மையான மாற்றம், 2026–ன் மொத்த FPI வெளியேற்றத்தை ரூ.1 லட்சம் கோடியைத் தாண்டச் செய்துள்ளது. இந்த விற்பனைக்கு மேற்கு ஆசியாவில் அதிகரித்து வரும் புவிசார் அரசியல் பதட்டங்களே முதன்மைக் காரணம் என சந்தைப் பங்கேற்பாளர்கள் குறிப்பிடுகின்றனர். நீண்டகால மோதல் மற்றும் ஹார்முஸ் ஜலசந்தி வழியாக எண்ணெய் விநியோகத் தடை குறித்த அச்சங்கள் எழுந்துள்ளன. இதன் விளைவாக, ப்ரென்ட் கச்சா எண்ணெய் விலை ஒரு பேரலுக்கு $100–ஐ தாண்டியுள்ளது. கச்சா எண்ணெய் விலை உயர்வு முக்கிய தூண்டுதலானது.ரூ93–க்கு அருகில் பலவீனமடைந்த ரூபாய், அமெரிக்க பத்திரங்களின் அதிக லாபம், பிப்ரவரி மாத லாபப் பதிவு, நான்காம் காலாண்டு வருவாய் அழுத்தங்கள் ஆகியவையும் கூடுதல் காரணங்கள்.

அமெரிக்க பத்திரங்களின். அதிக லாபம் டாலர் சொத்துக்களை நோக்கி ஈர்க்க, இந்தியா போன்ற வளர்ந்து வரும் சந்தைகளில் இருந்து மூலதனம் வெளியேறுகிறது. இது வலுவான டாலர், இறுக்கமான உலகளாவிய பணப்புழக்கத்துடன் இணைந்து பங்கு மீதான ஆர்வத்தைக் குறைக்கிறது.

உலகளாவிய பங்குச் சந்தைப் பலவீனம், ரூபாய் மதிப்பு சரிவு, உயர்ந்த கச்சா எண்ணெய் விலை உள்ளிட்ட பல காரணிகளின் தொகுப்பே FPI விற்பனையைத் தீவிரப்படுத்தியது. துறைவாரியாக, நிதிச் சேவைத் துறைப் பங்குகள் பெரும் சுமையைத் தாங்கின. மார்ச் 15–உடன் முடிவடைந்த இரு வாரக் காலப்பகுதியில், FPI–கள் இந்தப் பங்குகளிலிருந்து ரூ.31,831 கோடி மதிப்பிலான பங்குகளை விற்பனை செய்துள்ளனர். சந்தையில் நிலையற்ற தன்மை நீடிக்கும் என ஆய்வாளர்கள் எதிர்பார்க்கின்றனர். புவிசார் அரசியல் பதட்டங்கள் அல்லது எண்ணெய் விலை உயர்வு தொடர்ந்தால் வெளியேற்றங்கள் தொடரலாம். பதட்டங்கள் தணிவது, உள்நாட்டு முதலீட்டாளர் ஆதரவு, நேர்மறையான வருவாய் போன்றவை சந்தையை நிலைப்படுத்த உதவும். புவிசார் அபாயங்கள் குறைந்து உலகளாவிய சந்தை ஸ்திரத்தன்மை திரும்பும்போதே FPI முதலீடுகளில் நீடித்த மாற்றம் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## தேர்தல் அதிகாரிகளின் சோதனையில் சிக்கிய ‘AK 47’ துப்பாக்கிகள் - கடைசியில் நடந்த ட்விஸ்ட்!



சென்னை, மார்ச்.23–

சென்னை, அசோக் நகர், 2–வது அவென்யூ பகுதியில் தேர்தல் பறக்கும் படையினர் வாகன சோதனையில் ஈடுபட்டனர். அப்போது அவ்வழியே வந்த மினி வேனை நிறுத்தி சோதனையிட்டனர்.

அதில் ஏ.கே. 47 வகை உள்ளிட்ட 10–க்கும் மேற்பட்ட துப்பாக்கிகள் இருப்பதை கண்டு அதிர்ச்சி அடைந்தனர். அந்த துப்பாக்கிகளை ஆய்வு செய்த போது அவை டம்மிதுப்பாக்கிகள் என்பது தெரிந்தது. இதுபற்றி வேன் டிரைவர் மகேந்திரனிடம் விசாரணை நடத்தியபோது இந்த டம்மி துப்பாக்கிகள் அனைத்தும் பிரபல சினிமா இயக்குநர் லோகேஷ் கனகராஜ் கதாநாயகனாக நடித்து வரும் “டிசி” என்கிற புதிய படத்தின் படப்பிடிப்பிற்காக பயன்படுத்தியது என்பது தெரிந்தது.

சினிமா சூட்டிங் முடிந்ததும் அந்த துப்பாக்கிகளை வடபழனியில் உள்ள கடையில் ஒப்படைக்க எடுத்து செல்வதாக தெரிவித்தனர். இதையடுத்து டம்மி துப்பாக்கிகளுக்கு உண்டான லைசன்ஸை சரிபார்த்த பின்னர் வேனை அதிகாரிகள் அனுப்பி வைத்தனர். தேர்தல் அதிகாரிகள் சோதனையில் ஏ.கே.47 துப்பாக்கிகள் பறிமுதல் செய்யப்பட்டதாக தகவல் பரவியதால் அப்பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

# சீட் கொடுக்காததால் அமைச்சர் பதவி ராஜினாமா; காங்கிரசுக்கு தாவி தேர்தலில் போட்டி!



கவுகாத்தி, மார்ச். 23–

அசாம் தேர்தலில் போட்டியிட சீட் கொடுக்காததால், அமைச்சர் நந்திதா கர்லோசா தனது பதவியை ராஜினாமா செய்து விட்டு, காங்கிரஸ் இணைந்தார். மேலும், அவர் ஹாப்லாங் தொகுதியின் காங்கிரஸ் வேட்பாளராக அறிவிக்கப்பட்டார்.

126 இடங்களைக் கொண்ட அசாம் சட்டசபைக்கு வரும் ஏப்ரல் 9ம் தேதி ஒரே கட்டமாக தேர்தல் நடக்கிறது. தற்போது ஆளும் கட்சியான பாஜ மீண்டும் ஆட்சியைத் தக்க வைக்க முனைப்பில் இருந்து வருகிறது. அதேவேளையில், எப்படியாவது ஆட்சியைப் பிடிக்க வேண்டும் என்ற நோக்கில் காங்கிரஸ் செயல்பட்டு வருகிறது. இரு கட்சிகளும் வேட்பாளர்களை அறிவித்து பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றன.

இந்த நிலையில், யாரும் எதிர்பார்க்காத வகையில், முதல்வர் ஹிமந்த பிஸ்வா சர்மா தலைமையிலான அமைச்சரவையில் மின்சாரம், சுரங்கம் மற்றும் பழங்குடியினர் கலாசாரத் துறை அமைச்சர் நந்திதா கர்லோசா தனது பதவியை ராஜினாமா செய்து விட்டு, காங்கிரஸ் இணைந்தார். நடக்கவிருக்கும் தேர்தலில் . வரவிருக்கும் தேர்தலில் அவருக்குப் போட்டியிட வாய்ப்பு மறுக்கப்பட்டது. அவருக்கு பதிலாக, ரூபாலி லங்தாசா என்பவரை வேட்பாளராக அறிவித்துள்ளது. இதன் காரணமாகவே அவர் பாஜவில் இருந்து விலகி, காங்கிரஸில் இணைந்தார்.

எதிர்வரும் தேர்தலில் ஹாப்லாங் தொகுதியின் வேட்பாளராக அவரை காங்கிரஸ் அறிவித்துள்ளது. முன்னதாக காங்கிரஸ் வேட்பாளராக அறிவிக்கப்பட்ட நிர்மல் லங்தாசா போட்டியில் இருந்து விலகினார்.

# திமுக கூட்டணியில் 5 தொகுதிகளை ஏற்கலாமா? - மார்க்சிஸ்ட் ஆலோசனை!




சென்னை, மார்ச்,. 23–

தி.மு.க. தனது கூட்டணி கட்சிகளுக்கு தொகுதி பங்கீட்டை இறுதி செய்து வருகிறது. ஏற்கனவே. காங்கிரஸ் கட்சிக்கு 28 தொகுதிகள், இந்திய கம்யூனிஸ்டு கட்சிக்கு 5 தொகுதிகள், ம.தி.மு.க.வுக்கு 4, மனித நேய மக்கள் கட்சி, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் ஆகியவற்றுக்கு தலா 2 தொகுதிகளை ஒதுக்கியுள்ளது. விடுதலை சிறுத்தைகள் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி, தே.மு.தி.க. ஆகிய கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடந்து வருகிறது. புதிய கட்சிகள் கூட்டணிக்குள் இணைந்துள்ளதால் தொகுதிகளை குறைத்து கேட்குமாறு தனது கூட்டணி கட்சிகளை தி.மு.க. வலியுறுத்தி வருகிறது. குறிப்பாக, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சிக்கு கடந்த 2021 சட்டமன்றத் தேர்தலில் 6 தொகுதிகள் ஒதுக்கப்பட்டது. ஆனால், இந்த முறை 5 தொகுதிகள் ஒதுக்க தி.மு.க. தரப்பில் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது. இதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு ஏற்றுக்கொள்ளவில்லை.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் செயற்குழு கூட்டம் தி.நகரில் உள்ள கட்சி அலுவலகத்தில் கூடியிருக்கிறது. திமுகவுடன் நான்கு கட்டமாக நடந்த பேச்சுவார்த்தையில் தொகுதி பங்கீடு உடன்பாடு எட்டப்படாத நிலையில் தொடர்ந்து திமுக கூட்டணியில் 6 தொகுதிகளை ஒதுக்க வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறது. ஆனால் திமுக ஐந்து தொகுதிகளை ஒதுக்க முன்வந்துள்ளது.நேற்று முன் தினம் திமுகவுடன் நடந்த பேச்சுவார்த்தையின் போது திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் நேரடியாக வந்து திமுக கூட்டணியில் உள்ள கட்சிகளுக்கு தொகுதிகள் ஒதுக்கப்படும் நிலை இருப்பதால் 5 தொகுதிகளை ஏற்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

இந்த நிலையில் இன்று செயற்குழு கூட்டம் இன்று கூடியிருக்கிறது. முதல்–அமைச்சர் தெரிவித்த கருத்துகள் இந்த கூட்டத்தில் முன் வைக்கப்படும். செயற்குழு உறுப்பினர்களின் கருத்துகளை கேட்டுக்கொண்டு இன்று முடிவு எடுக்கப்படும்.நேற்று முன்தினம் நடந்த மாநிலக்குழுவில் தொகுதி பங்கீடு குறித்து முடிவு எடுக்கும் அதிகாரத்தை செயற்குழுவிற்கு மாநிலக்குழு வழங்கியுள்ளது. தற்போது செயற்குழுவில் முடிவு எட்டப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன்பின்பு மார்க்சிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம் திமுகவுடன் தொகுதி பங்கீடு குறித்து பேச்சுவார்த்தை நடத்துவார்.

# தேர்தலுக்கு ஒரு மாதம்.. வேட்புமனு தாக்கலுக்கு ஒரு வாரம்: திமுக, அதிமுக கூட்டணிகளில் தொகுதி பங்கீட்டில் தொடரும் இழுபறி...!




சென்னை, மார்ச். 23–

தமிழகத்தில் அடுத்த மாதம் (ஏப்ரல்) 23–ந் தேதி சட்டசபை தேர்தல் நடைபெற இருக்கிறது. அந்த வகையில், தேர்தலுக்கு இன்னும் ஒரு மாதமே இருக்கிறது. அதே போல், வேட்புமனு தாக்கல் வரும் 30–ந் தேதி தொடங்க உள்ளது. அதை வைத்து பார்க்கும்போது, வேட்புமனு தாக்கலுக்கு இன்னும் ஒரு வாரமே இருக்கிறது.

ஆனால், தமிழகத்தில் ஆளும் கட்சியான தி.மு.க. கூட்டணியிலும், ஆண்ட கட்சியான அ.தி.மு.க. கூட்டணியிலும் இன்னும் தொகுதி பங்கீடு பேச்சு வார்த்தை முடியவில்லை. தொடர்ந்து இழுபறி நிலையே நீடித்து வருகிறது.

**தி.மு.க. கூட்டணியில் தொகுதி பங்கீடு**

26 கட்சிகள் இடம்பெற்றுள்ள தி.மு.க. கூட்டணியில், இதுவரை காங்கிரஸ் 28, இந்திய கம்யூனிஸ்டு கட்சி 5, ம.தி.மு.க. 4, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் 2, மனிதநேய மக்கள் கட்சி 2, கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி 2 தொகுதிகள் என 6 கட்சிகளுடன் தொகுதி பங்கீடு முடிந்துள்ளது.

விடுதலை சிறுத்தைகள் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி ஆகியவை இரட்டை இலக்க தொகுதிகள் கேட்டுவரும் நிலையில், கடந்த முறை வழங்கிய 6 தொகுதிகளையும்விட ஒன்று குறைவாக வழங்கப்படும் என்று தி.மு.க. தலைமை கூறியதால் இரு கட்சிகளும் அதிருப்தி அடைந்துள்ளன. இதனால், தி.மு.க. கூட்டணியில் இடம்பெற்றுள்ள தே.மு.தி.க., மக்கள் நீதி மய்யம் உள்ளிட்ட ஏனைய கட்சிகளுடன் தொகுதி பங்கீடு பேச்சு வார்த்தை இன்னும் நடைபெறவே இல்லை.

**அ.தி.மு.க. கூட்டணி**

அ.தி.மு.க. கூட்டணியை பொறுத்தவரை பா.ஜ.க., பா.ம.க., அ.ம.மு.க., த.மா.கா., புதிய நீதிக்கட்சி, இந்திய ஜனநாயக கட்சி உள்ளிட்டவை இடம்பெற்றிருந்தாலும், இன்னும் ஒரு கட்சிக்கு கூட தொகுதி பங்கீடு இறுதி செய்யப்படவில்லை.

அ.தி.மு.க. கூட்டணியில், அ.தி.மு.க. 162, பா.ஜ.க. 31, பா.ம.க. 17, அ.ம.மு.க. 9, த.மா.கா. 4, இந்திய ஜனநாயக கட்சி 2, புதிய நீதிக்கட்சி 2, தமிழக மக்கள் முன்னேற்றக் கழகம் 2, பார்வர்டு பிளாக் 1, பெருந்தலைவர் மக்கள் கட்சி 1, புரட்சி பாரதம் 1 என தொகுதிகளை பிரித்துக் கொண்டு தேர்தலில் போட்டியிடும் என தெரிகிறது.

**கூடுதல் தொகுதிகள் எதிர்பார்க்கும் அன்புமணி, டி.டி.வி.தினகரன்**

அதேபோல், டாக்டர் கிருஷ்ணசாமியின் புதிய தமிழகம் கட்சியுடன் கூட்டணி பேச்சு வார்த்தை நடந்து வருகிறது. அந்தக் கட்சியும் அ.தி.மு.க. கூட்டணியில் இணைந்தால் 2 தொகுதிகள் வழங்கப்படும் என தெரிகிறது.


ஆனால், பா.ம.க. தலைவர் டாக்டர் அன்புமணி, அ.ம.மு.க. பொதுச் செயலாளர் டி.டி.வி.தினகரன் ஆகியோர், தங்கள் கட்சிக்கு கூடுதல் தொகுதிகள் வேண்டும் என டெல்லி சென்று மத்திய உள்துறை மந்திரி அமித்ஷாவை சந்தித்து பேசினார்கள்.

**வேட்புமனு தாக்கலுக்கு ஒரு வாரம்..**

அதேபோல், நடிகர் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகமும், இயக்குனர் சீமானின் நாம் தமிழர் கட்சியும் சட்டசபை தேர்தலில் தனித்து போட்டியிடுவதாக அறிவித்துள்ளன. நாம் தமிழர் கட்சியில் 234 தொகுதிகளுக்கும் வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டுவிட்ட நிலையில், தமிழக வெற்றிக் கழகத்தில் இன்னும் 234 தொகுதிகளுக்கும் வேட்பாளர்கள் அறிவிக்கப்படவில்லை.

எது எப்படியோ, தமிழகத்தில் வேட்புமனுதாக்கல் அடுத்த வாரம் திங்கட்கிழமை (30–ந் தேதி) தொடங்க இருக்கிறது. எனவே, ஒருவார காலத்துக்குள் கூட்டணிக்கு தலைமை தாங்கும் கட்சிகள் தொகுதி பங்கீட்டையும், என்னென்ன தொகுதிகள் என்பதையும் அடையாளம் கண்டு முடிக்கவேண்டும். அடுத்து, அனைத்து கட்சிகளிலும் வேட்பாளர்களும் அறிவிக்கப்பட வேண்டும்.

# தீ அணைப்பு வாகனம் மீது விமானம் மோதி விபத்து: பயணிகள் காயம்!



நியூயார்க், மார்ச். 23–

அமெரிக்காவின் நியூயார்க் நகரில் உள்ள லாகார்டியா விமான நிலையத்தில் ஏர் கனடா நிறுவனத்திற்கு சொந்தமான விமானம் விபத்தில் சிக்கியது. தரையிறங்கும் போது ஏற்பட்ட கோளாறால், விமானம் ஓடுதளத்தில் இருந்த தீ அணைப்பு வாகனத்தின் மீது மோதியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.இந்த விபத்தில் விமானத்தின் முன்பகுதி சேதமடைந்தது. விமானத்தில் இருந்த சில பயணிகள் காயமடைந்ததாக கூறப்படுகிறது. காயமடைந்தவர்கள் உடனடியாக அருகிலுள்ள மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சம்பவம் நடந்த உடனே அவசர மீட்பு குழுக்கள் விரைந்து வந்து உதவி பணிகளில் ஈடுபட்டன. தீ அணைப்பு படையினரும் பாதுகாப்பு பணிகளில் ஈடுபட்டு நிலைமையை கட்டுக்குள் கொண்டு வந்தனர்.இந்த விபத்தினால் லாகார்டியா விமான நிலையத்தில் விமான சேவைகள் தற்காலிகமாக பாதிக்கப்பட்டன.



## பாபா வங்காவின் கணிப்பு..! மார்ச் 23-க்குப் பிறகு, இந்த ராசிக்காரர்களுக்கு இனி வெற்றி மட்டுமே..!




பாபா வங்கா தனது தீர்க்கதரிசனங்களுக்காக உலகம் முழுவதும் அறியப்படுகிறார். பல தசாப்தங்களுக்கு முன்பு அவர் கூறிய பல விஷயங்கள் உண்மையாகிவிட்டதாக மக்கள் நம்புகின்றனர். மார்ச் 23 முதல் 29 வரையிலான காலகட்டத்திற்கான பாபா வங்காவின் கணிப்புகள் தற்போது சுவாரஸ்யமான ஒன்றாக மாறியுள்ளன. இந்த வாரத்தில், ஐந்து ராசிக்குரிய மக்கள் அதிர்ஷ்டத்தைப் பெறுவது மட்டுமல்லாமல், தங்கள் குடும்பத்தினருடன் இணைந்து புனிதத் தலங்களுக்குச் செல்லும் வாய்ப்பையும் பெறுவார்கள்

மேஷம்: உங்கள் கனவுகள் நனவாகும். வீடு அல்லது குடியிருப்பு வாங்குவதற்கான உங்கள் விருப்பம் நிறைவேறக்கூடும். புதிய நபர்களைச் சந்திப்பதன் மூலம் உங்கள் வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படும். வேலை தேடுபவர்களுக்கு நல்ல செய்திகள் வந்து சேரும். வணிகர்களுக்கு நல்ல லாபம் கிடைக்கும்.

மிதுனம்: முடங்கிக் கிடந்த பணம் மீண்டும் கைக்கு வரும். பழைய பிரச்சனைகளிலிருந்து நீங்கள் விடுபடுவீர்கள். உடல்நலக்குறைவிலிருந்து நீங்கள் மீண்டு வருவீர்கள். அலுவலகத்தில் உங்கள் மேலதிகாரிகளிடமிருந்து உங்களுக்கு ஆதரவு கிடைக்கும். செலவுகளைக் குறைப்பதன் மூலம் உங்கள் நிதி நிலைமை மேம்படும்.

சிம்மம்: சூழ்நிலைகள் உங்களுக்குச் சாதகமாக மாறும். உங்கள் மனதில் நேர்மறையான எண்ணங்கள் அதிகரிக்கும். வாழ்க்கைத் துணையுடனான பிணைப்பு வலுப்பெறும். வணிக முன்னேற்றத்தின் காரணமாக உங்கள் வங்கிக் கணக்கு இருப்பு அதிகரிக்கும். முக்கிய முடிவுகளை எடுப்பதற்கு இதுவே சரியான நேரமாகும்.

துலாம்: நீங்கள் பணிபுரியும் முறையில் ஒரு மாற்றம் ஏற்படும். நீண்டகாலப் பிரச்சனைகள் தீர்க்கப்படும். உடல் ஆரோக்கியம் மேம்படும். உங்கள் சொத்துக்கள் அதிகரிக்கும் என்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. அதிர்ஷ்டத்தின் துணையால், முடிக்கப்படாமல் நிலுவையில் உள்ள பணிகள் விரைவாக நிறைவடையும்.

மகரம்: இந்தக் காலகட்டம் மிகவும் அற்புதமானதாக அமையும். உங்கள் அன்புக்குரியவர்களிடம் உங்கள் உணர்வுகளை வெளிப்படுத்த உங்களுக்கு வாய்ப்பு கிடைக்கும். முதலீடுகளைச் செய்வதற்கு இது ஒரு சாதகமான வாரமாகும். நண்பர்கள் மூலமாக வேலைவாய்ப்பு குறித்த தகவல்கள் உங்களுக்குக் கிடைக்கும். சட்டரீதியான சிக்கல்களிலிருந்து உங்களுக்கு நிவாரணம் கிடைக்கும். உங்கள் தந்தையின் உடல் ஆரோக்கியம் மேம்படும்.

## 2 கட்டங்களாக பட்டியல் வெளியாகிறது- தவெக வேட்பாளர்களின் வேட்புமனு ஆவணங்கள் சரிபார்ப்பு!




சென்னை, மார்ச். 23–

2026 சட்டமன்ற தேர்தலில் 234 தொகுதிகளிலும் த.வெ.க. தனித்து போட்டியிடுகிறது.

இதைத் தொடர்ந்து தேர்தல் பணிகளில் கட்சி தலைவர் விஜய் உத்தரவின் பேரில் பொதுச்செயலாளர் என். ஆனந்த் அறிவுறுத்தலின் படி த.வெ.க.வினர் தீவிர களப் பணியில் ஈடுபட்டு உள்ளனர்.

த.வெ.க. சார்பில் 234 தொகுதிகளில் போட்டியிடும் வேட்பாளர்கள் தேர்வு செய்யும் பணிகள் முடிவடைந்து பட்டியல் தயார் நிலையில் உள்ளது.

தேர்வு செய்யப்பட்ட வேட்பாளர்களின் நேர்காணலை 2 கட்டமாக சென்னை பனையூரில் உள்ள கட்சி அலுவலகத்தில் விஜய் நடத்தி வேட்பாளர்களிடம் அடுத்ததாக உங்களை நான் எம்.எல்.ஏ.வாகதான் பார்ப்பேன் என வாழ்த்து தெரிவித்தார்.

இறுதி செய்யப்பட்டுள்ள வேட்பாளர்கள் பட்டியல் 2 கட்டமாக இன்னும் சில தினங்களில் வெளியாக இருக்கிறது.

த.வெ.க. சந்திக்கும் முதல் தேர்தல் இது என்பதால் கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களின் வேட்பு மனுக்கள் மற்றும் ஆவணங்கள் சரி பார்ப்பு பணி சென்னை பனையூரில் உள்ள கட்சி தலைமை அலுவலகத்தில் பொதுச்செயலாளர் என். ஆனந்த் தலைமையில் இன்று நடந்தது.

இதில் சுமார் 100–க்கும் மேற்பட்ட த.வெ.க. வேட்பாளர்கள் பங்கேற்றனர். ஒவ்வொரு வேட்பாளர்களுக்கும் ஒரு வழக்கறிஞர் மற்றும் ஐ.டி. லிங்கை சேர்ந்த ஒருவர் லேப் டாப்புடன் பணியமர்த்தப்பட்டனர்.

ஒவ்வொரு வேட்பாளர்களின் வேட்புமனுக்கள் மற்றும் சம்பந்தப்பட்ட ஆவணங்களை அங்குல அங்குலமாக அலசி ஆராய்ந்து எந்தவித “பிழை”யும் இடம்பெறாத வண்ணம் தீவிரமாக சரி பார்க்கப்பட்டது. இன்று காலை 10 மணி முதல் மாலை வரை இந்த சரி பார்ப்பு பணிகள் நடந்தது.




## தினமும் காலையில் இதை குடித்தால் போதும்..! சர்க்கரை நோயையும் கட்டுப்படுத்தலாம்..!



இன்றைய காலகட்டத்தில், ஒவ்வொரு வீட்டிலும் யாரேனும் ஒருவர் ஏதேனும் ஒரு உடல்நலப் பிரச்சனையால் அவதிப்பட்டு வருகின்றனர். அது நீரிழிவு, தைராய்டு, யூரிக் அமிலம் அல்லது வாயுத் தொல்லையாக இருக்கலாம்; இதுபோன்று பல பிரச்சனைகளால் நாம் பாதிக்கப்படுகிறோம். இவற்றைக்கட்டுப்படுத்தவோ அல்லது குறைக்கவோ நாம் தினமும் மாத்திரைகளை உட்கொள்கிறோம். இருப்பினும், சில பிரச்சனைகளுக்கு மருத்துவர்கள் மட்டுமே தீர்வு அளிக்க முடியும் என்பதில்லை; நம் சமையலறையும் தீர்வுகளை வழங்க வல்லது. எளிய குறிப்புகளைப் பின்பற்றுவதன் மூலம், பல வகையான நோய்களை நாம் கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியும்.

இப்போது, அத்தகைய ஒரு எளிய குறிப்பைப் பற்றித் தெரிந்துகொள்வோம்.

கொத்தமல்லி நீர்: டாக்டர் ஏ. படேல் அவர்களின் கூற்றுப்படி, நம் சமையலறையில் உள்ள கொத்தமல்லி இலைகள் சுவைக்கு மட்டுமல்லாமல், பல பிடிவாதமான நோய்களைக் குணப்படுத்துவதிலும் பயனுள்ளதாக அமைகின்றன. குறிப்பாகக் காலையில் வெறும் வயிற்றில் கொத்தமல்லி நீரைக் குடிப்பது உடலுக்குப் பலவிதமான நன்மைகளைத் தருகிறது.

தைராய்டு பிரச்சனைகளுக்கான தீர்வு: இந்தக் கட்டுரையின்படி, தைராய்டு பிரச்சனைகளால் அவதிப்படுபவர்களுக்குக் கொத்தமல்லி நீர் ஒரு சிறந்த நிவாரணியாகத் திகழ்கிறது. இது உடலில் உள்ள ஹார்மோன்களின் சமநிலையைப் பராமரிக்கிறது. தைராய்டு சுரப்பியின் ஏற்ற இறக்கங்களைக் கட்டுப்படுத்துவதில் இது முக்கியப் பங்கு வகிக்கிறது.

கொலஸ்ட்ரால் மற்றும் இதய ஆரோக்கியம்: உடலில் தேங்கியுள்ள கெட்ட கொலஸ்ட்ராலைக் (LDL) குறைக்கக் கொத்தமல்லி நீர் உதவுகிறது. இது இரத்தக் குழாய்களில் கொழுப்பு படிவதைத் தடுத்து, அதன் மூலம் இதய நோய் ஏற்படும் அபாயத்தைக் குறைக்கிறது. மேலும், இது இரத்த ஓட்டத்தைச் சீராக்கி, இதயத்தை ஆரோக்கியமாகப் பராமரிக்கிறது.

உடலைச் சுத்திகரிக்கும் ‘Detox’ பானம்: கொத்தமல்லி நீர் ஒரு ‘Detox’ பானமாகச் செயல்பட்டு, நம் உடலில் உள்ள நச்சுகளை வெளியேற்றுகிறது. இது சிறுநீரகங்களைச் சுத்திகரித்து, அவற்றின் செயல்பாட்டை மேம்படுத்துகிறது. மேலும், இது இரத்தத்தையும் தூய்மைப்படுத்துகிறது.

எலும்பு வலிமை மற்றும் மூட்டு வலி: கொத்தமல்லியில் நிறைந்துள்ள கால்சியம் மற்றும் பிற தாதுக்கள் எலும்புகளை வலுப்படுத்துகின்றன. மூட்டு வலி அல்லது மூட்டு வாதத்தால் (Arthritis) அவதிப்படுபவர்கள், இந்தக் கொத்தமல்லி நீரைக் குடிப்பதன் மூலம் வீக்கம் மற்றும் வலியிலிருந்து நிவாரணம் பெறலாம்.

நீரிழிவு கட்டுப்பாடு: இரத்தத்தில் உள்ள குளுக்கோஸ் அளவைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கக் கொத்தமல்லி நீர் உதவுகிறது. இது இன்சுலின் சுரப்பைத் தூண்டி, நீரிழிவு நோயாளிகளுக்குப் பேருதவியாக அமைகிறது.

முக்கியக் குறிப்பு: கொத்தமல்லி குளிர்ச்சித் தன்மை கொண்டது. எனவே, சளி அல்லது இருமல் இருக்கும் சமயங்களில் இதைக் குடிப்பதற்கு முன் சற்று எச்சரிக்கையுடன் இருப்பது அவசியம். மேலும், ஏதேனும் தீவிரமான உடல்நலப் பிரச்சனைகள் உள்ளவர்கள், மருத்துவரின் ஆலோசனையைப் பெற்ற பின்னரே இதைக் குடிப்பது சிறந்தது. தயாரிப்பு மற்றும் பயன்பாடு: ஒரு டம்ளர் நீரில் ஒரு தேக்க ரண்டி அளவு கொத்தமல்லி விதைகளை போட்டு, இரவு முழுவதும் ஊற வைக்கவும். மறுநாள் காலையில், அந்த நீரைச் சற்று கொதிக்க வைத்தோ அல்லது அப்படியே வடி கட்டியோ குடிக்கலாம். இதை ஒரு தினசரிப் பழக்கமாக மாற்றிக்கொள்வதன் மூலம், மேலே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நன்மைகளையும் நீங்கள் முழுமையாகப் பெற முடியும்.

# திருப்பதி செல்பவரா நீங்கள்? அப்போ இந்த ஜாக்பாட் நியூஸ் உங்களுக்குத்தான்!




திருமலை, மார்ச். 23–

திருப்பதி ஏழுமலையான் பக்தர்களுக்கு முக்கியச் செய்தி என்னவென்றால், திருமலையில் உணவின் தரம் மற்றும் பக்தர்களின் வசதிகளை மேம்படுத்த ஆந்திர முதல்வர் நாரா சந்திரபாபு நாயுடு அவர்கள் பல்வேறு அதிரடி நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளார்.

**பக்தர்களுக்கு வசதி:**

பக்தர்கள் திருப்பதிக்கு வந்து தங்குமிடம், தரிசனம் முடித்துவிட்டு மீண்டும் ஊர் திரும்பும் வரை அனைத்து வசதிகளும் தடையின்றி கிடைக்க வேண்டும் என்பதில் ஆந்திர அரசு உறுதியாக உள்ளது. ரூ.30 கோடி மதிப்பில் ஆய்வகம் மற்றும் AI தொழில்நுட்ப வருகை, திருமலை பயணத்தை பக்தர்களுக்கு இன்னும் பாதுகாப்பானதாகவும், எளிமையானதாகவும் மாற்றும் என்பதில் சந்தேகமில்லை.

**திருப்பதியில் ஃபுட் அனாலிசிஸ் லேப்:**

இந்தியாவிலேயே ஒரு கோவிலுக்காக பிரத்யேகமாக அமைக்கப்பட்ட முதல் அதி நவீன உணவுப் பரிசோதனை ஆய்வகத்தை (Food Analysis Lab) திருமலையில் ஆந்திர முதல்வர் (மார்ச் 21, 2026) திறந்து வைத்தார்.

ஆந்திர அரசு மற்றும் திருமலை திருப்பதி தேவஸ்தானம் (TTD) இணைந்து சுமார் 30 கோடி ரூபாய் செலவில் இந்த லேப்பை உருவாக்கியுள்ளன. இதன்மூலம் ஏழுமலையானுக்கு நிவேதனம் செய்யப்படும் பிரசாதங்கள், பக்தர்களுக்கு வழங்கப்படும் அன்னப்பிரசாதம் மற்றும் லட்டு தயாரிப்பிற்குப் பயன்படுத்தப்படும் மூலப்பொருட்களின் தரத்தை உறுதி செய்யப்படும்.

**திருப்பதி லட்டு / ஜலப்பிரசாதம் :**

இந்த ஆய்வகத்தின் மூலம் லட்டு தயாரிக்கப் பயன்படுத்தப்படும் நெய், ஏலக்காய், முந்திரி உள்ளிட்ட அனைத்துப் பொருட்களும் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்படும். மூலப்பொருட்களில் மைக்ரோ டாக்சின்கள் (Micro–toxins), தேவையற்ற வேதிப்பொருட்கள் அல்லது அமிலங்கள் கலந்துள்ளனவா என்பதைப் பரிசோதிக்கத் தனித்தனி இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளன.

திருமலையில் பக்தர்களுக்கு வழங்கப்படும் ஜலப்பிரசாதம் (குடிநீர்) மற்றும் அன்னப்பிரசாதத்திற்குப் பயன்படுத்தப்படும் நீரில் உள்ள தாதுக்களின் (Min–erals) அளவும் இங்கு துல்லியமாகப் பரிசோதிக்கப்படும்.

லேப் ரிப்போர்ட்டில் ‘தரம் உறுதி’ என்று சான்றிதழ் வந்த பிறகு மட்டுமே, அந்தப் பொருட்கள் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என முதல்வர் உத்தரவிட்டுள்ளார்.

**AI தொழில்நுட்பம் மூலம் விரைவான தரிசனம்**

பக்தர்கள் நீண்ட நேரம் காத்திருப்பதைத் தவிர்க்க, செயற்கை நுண்ணறிவு (AI – Artificial Intelligence) தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த முதல்வர் திட்டமிட்டுள்ளார். இதற்காக எத்தனை கோடி செலவானாலும் அரசு ஏற்கத் தயார் என அவர் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக டோக்கன் இல்லாமல் தர்ம தரிசனத்திற்கு வரும் பக்தர்கள் விரைவாக சுவாமி தரிசனம் செய்துவிட்டு வெளியே வரும் வகையில் வரிசை மேலாண்மை (Queue Management) மாற்றியமைக்கப்பட உள்ளது.

**திருப்பதி தேவஸ்தானத்திற்கு புதிய அதிகாரி:**

திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் புதிய நிர்வாக அதிகாரியாக (EO) அனுபவம் வாய்ந்த ஐ.ஏ.எஸ் அதிகாரி நியமிக்கப்பட்டு உள்ளார். இவர் ஏற்கனவே நிதித்துறைச் செயலாளராகப் பணியாற்றியவர் என்பதால், இனி வரும் காலங்களில் திருமலையின் நிர்வாகம் மற்றும் ஆன்லைன் சேவைகளில் பெரிய மாற்றங்களை எதிர்பார்க்கலாம்.

**ஆன்லைன் புக்கிங் சிக்கல்களுக்கு விரைவில் தீர்வு**

தற்போது ஆன்லைன் புக்கிங்கில் பக்தர்கள் சந்திக்கும் தொழில்நுட்பக் கோளாறுகள் மற்றும் ‘எர்ரர்’ (Error) பிரச்சனைகளைச் சரிசெய்யப் புதிய திட்டங்கள் முன்மொழியப்பட்டுள்ளன.

# நாமக்கல் மாவட்டத்தில் தேர்தல் பணியில் ஈடுபட உள்ள அதிகாரிகளுக்கான ஆலோசனைக் கூட்டம்!




நாமக்கல், மார்ச். 23–

தேர்தல் ஆணையத்தின் பார்வையாளர்கள் முன்னிலையில், நாமக்கல் மாவட்டத்தில் தேர்தல் பணியில் ஈடுபட உள்ள அதிகாரிகளுக்கான ஆலோசனைக் கூட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது.

மாவட்ட தேர்தல் அலுவலரும், ஆட்சியருமான துர்கா மூர்த்தி தலைமை வகித்தார். தேர்தல் கமிஷன் நியமித்துள்ள ராசிபுரம், சேந்தமங்கலம் தொகுதி தேர்தல் பொதுப்பார்வையாளர் அன்கித்குமார் அகர்வால், செலவின பார்வையாளர் பிரதீப், நாமக்கல், பரமத்தி வேலூர் தொகுதி பொதுப்பார்வையாளர் மனோஜ் புஷப், நாமக்கல் தொகுதி செலவின பார்வையாளர் முகேஷ் கட்டாரியா, ப.வேலூர், திருச்செங்கோடு தொகுதி செலவின பார்வையாளர் ரோஹித்குமார், திருச்செங்கோடு, குமாரபாளையம் தொகுதி பொதுப்பார்வையாளர் லாலாசாஹிப் யாதவ், குமாரபாளையம் தொகுதி செலவின பார்வையாளர் புத்தி பிரகாகாஷ் மற்றும் 6 சட்டசபை தொகுதிகளுக்கான தேர்தல் போலீஸ் பார்வையாளர் மயூர் குலாப்ராவ் பாட்டில் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

# தமிழ்நாடு அமெச்சூர் பாடி பில்டிங் அசோசியேசன் தலைவர் அரசு நாமக்கல்லில் பேட்டி!




நாமக்கல், மார்ச். 23–

நாமக்கல் மாவட்ட அமெச்சூர் பாடி பில்டிங் சங்கமும் தனியார் பிட்னஸ் சென்டர் ஆகியவை இணைந்து நாமக்கல்லில் மாநில அளவிலான ஆண்கள் பெண்கள் மாற்றுத்திறனாளிகளுக்கான பாடி பில்டிங் போட்டிகள் இன்று நடைபெற்றது.

இதில் நாமக்கல், சென்னை, திருவள்ளூர், சேலம், கிருஷ்ணகிரி, திருச்சி, கரூர், கோவை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்து 142 பேர் கலந்து கொண்டு 15 பிரிவின் கீழ் போட்டியில் பங்கேற்று திறமைகளை வெளிப்படுத்தினர்.

இந்த பாடி பில்டிங் போட்டியில் வெற்றிப்பெற்றவர்களுக்கு தமிழ்நாடு அமெச்சூர் பாடி பில்டிங் அசோசியேசன் தலைவர் அரசு, உலக ஆணழகன் பாஸ்கரன், தனலெட்சுமி ஆகியோர் ரொக்கப்பரிசு, சான்றிதழ், பதக்கம், வெற்றிக்கோப்பைகளை வழங்கி வாழ்த்தினர்.

இதனையடுத்து தமிழ்நாடு அமெச்சூர் பாடி பில்டிங் அசோசியேசன் தலைவர் அரசு செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார்., மாநில, தேசிய, சர்வதேச அளவிலான ஆணழகன் போட்டியில் வெற்றிப்பெறும் வீரர்களுக்கு தமிழக அரசு விளையாட்டுத்துறைக்கான 3 சதவிகித இடஒதுக்கீட்டில் ஆணழகன் போட்டியில் வெற்றிப்பெற்றவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கிட வேண்டும் என தமிழக முதலமைச்சர், துணை முதலமைச்சரை சந்தித்து கோரிக்கை மனு அளித்துள்ளோம் ஆனால் எந்த அறிவிப்பு இல்லை.

இந்தியாவில் மகாராட்டிரா மாநிலத்தில் ஆணழகன் போட்டியில் வெற்றிப்பெற்றவர்களுக்கு 5 சதவிகித இடஒதுக்கீட்டில் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டு வருகின்றன அதேப்போல மத்திய அரசும் வேலைவாய்ப்பு வழங்குகின்றன எனவே தமிழக அரசும் வேலைவாய்ப்பு வழங்க வேண்டும். அதே நேரத்தில் ஆணழகன் போட்டியில் வெற்றிபெறுவோருக்கு வேலைவாய்ப்பு வழங்கும்பட்சத்தில் அவர்கள் தவறான பாதைக்கு இளைஞர்கள் செல்ல வாய்ப்பில்லை, தற்போது பெண்களும் ஆர்வமுடன் பலர் பாடி பில்டிங் போட்டியில் கலந்து கொள்கின்றனர் அவர்களுக்கும் தமிழக அரசு வேலைவாய்ப்பு ஏற்படுத்தி கொடுத்தால் நன்றாக இருக்கும் என்றார்.

# ரூ.2 லட்சத்திற்கு முத்திரைத்தாள் வாங்க பான் கார்டு எண் கட்டாயம்!




சென்னை, மார்ச். 23–

தமிழ்நாடு முழுவதும் ரியல் எஸ்டேட் துறை தற்போது கொடிகட்டி பறக்கிறது. அதிக அளவிலான நிலங்களை வாங்கி பிளாட்டுகளாக போட்டு விற்பனை செய்ய பெரிய நிறுவனங்கள் வந்துள்ளன. ஆனால், இதுபோன்று சொத்துகள் வாங்குவதில் கருப்பு பணப்புழக்கம் அதிகரித்து இருப்பதாக கூறப்படுகிறது. இதை கட்டுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை வருமான வரித்துறை எடுத்து வருகிறது. அந்த வகையில், சொத்து பரிமாற்றத்தில் ரொக்கமாக பணத்தை பயன்படுத்துவதற்கு தடை விதித்துள்ளது. இதில், கையாளப்படும் தொகை முழுவதும், வங்கி கணக்குகள் வாயிலாக செல்ல வேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதன்படி, பத்திரத்தில் குறிப்பிடப்படும் தொகையை மட்டுமே, வங்கிகள் வாயிலாக மக்கள் கைமாற்றுகின்றனர். அதற்கு மேற்பட்ட தொகையை ரொக்கமாக கொடுக்கின்றனர். அதாவது, பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட நிலத்தின் வழிகாட்டி மதிப்பு தொகையை மட்டுமே வங்கிகள் மூலம் கொடுக்கின்றனர். ஆனால், கூடுதலான மார்க்கெட் விலையை ரொக்கமாகவே கொடுக்கின்றனர்.

# 10-ம் வகுப்பு பொதுத்தேர்வு: ஸ்கிரைப் நியமனத்தில் மாற்றம்!



சென்னை, மார்ச். 23–

பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதும் மாணவர்களுக்கான ஸ்கிரைப் நியமன விதிமுறைகளில் தேர்வுத் துறை சில திருத்தங்களை செய்துள்ளது. சம்பந்தப்பட்ட பாட ஆசிரியர்களை இந்த பணிக்கு நியமிக்க கூடாது என அறிவுறுத்தியுள்ளது.

இதுகுறித்து தேர்வுத் துறை இயக்குநர் க.சசிகலா அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் அனுப்பிய சுற்றறிக்கை விவரம்: பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வு கடந்த மார்ச் 11–ம் தேதி தொடங்கி நடைபெற்று வருகிறது. இந்த வகுப்புக்கான கணிதம், அறிவியல், சமூக அறிவியல் ஆகிய பாடங்களுக்கு தேர்வர்களின் முகப்புத் தாள்கள் முதன்மை விடைத்தாள்களுடன் தைக்கப்பட்டுள்ளதை தேர்வுக்கு முன்னரே உறுதி செய்ய வேண்டும்.

இதுதவிர, சொல்வதை எழுதுபவர் (ஸ்கிரைப்) நியமனங்களில் தேர்வு நடைபெறும் பாடத்தை பயிற்றுவிக்கும் ஆசிரியர்களை நியமிக்கக்கூடாது. அதேபோல, பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வின் அறை கண்காணிப்பு பணியில் 6 முதல் 8–ம் வகுப்பு வரை பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள்தான் நியமிக்கப்பட வேண்டும். தேர்வர்களுக்கு வழங்கப்படும் கோடிடப்படாத கூடுதல் விடைத்தாள்களை போதுமான அளவு பெற்று வைத்துக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வுகள் ஏப்ரல் 6–ம் தேதியுடன் நிறைவடைய உள்ளது குறிப்பிடத்தக்கது.



**இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்**

127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882

மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது

சென்னை
Ph: 98659 88881

# வேலை வாய்ப்பு
## சசாஸ்த்ரா சீமா பால் 827 கான்ஸ்டபிள் காலியிடங்கள்!




நிறுவனத்தின் பெயர்: சஷஸ்த்ர சீமா பல்
அறிவிப்பு எண்: 524/RC/SSB/Combined Advt./CT to SI (Non GD)/ 2025
பணி வகை: மத்திய அரசுப் பணிகள்
வேலைவாய்ப்பு வகை: நிரந்தரம்
மொத்த காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை: 827 காவலர் (ஓட்டுநர், கால்நடை மருத்துவர், தோட்டக்காரர், தண்ணீர் கொண்டு செல்பவர், செருப்புத் தைப்பவர், தையல்காரர், சலவையாளர், முடி திருத்துபவர், உணவு பரிமாறுபவர், தச்சர், செவிலியர் உதவியாளர்) பணியிடங்கள்
பணியிடங்கள்: இந்தியா முழுவதும்
தொடங்கும் தேதி: 21.03.2026
கடைசி தேதி: 20.04.2026
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
அதிகாரப்பூர்வ இணையதளம்: https://ssb.gov.in/

# ஓடும் ரெயில்கள் மீது கல்வீசினால் 10 ஆண்டுகள் சிறை: தெற்கு ரெயில்வே எச்சரிக்கை!





சென்னை, மார்ச். 23–

தெற்கு ரெயில்வே வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:–

ரெயில் மீது கல் வீசுவது போன்ற சட்டவிரோத செயல்கள் பயணிகளின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமைவதோடு, ரெயில்வே ஊழியர்களுக்கு ஆபத்தையும், பொதுச்சொத்துகளுக்கு சேதத்தையும், ரெயில் சேவையில் இடையூறுகளையும் ஏற்படுத்துகின்றன. ஓடும் ரெயில் மீது வீசப்படும் கற்கள் ஜன்னல் கண்ணாடிகளை உடைத்து உள்ளே இருக்கும் பயணிகள், குழந்தைகள், முதியவர்களுக்கு காயங்களையும், உடல் பாதிப்புகளையும் ஏற்படுத்தும்.

இதுபோன்ற செயல்களில் ஈடுபடுவது ரெயில்வே சட்டம் 1989 பிரிவு 152–ன் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும். இதற்கு 10 ஆண்டுகள் வரை சிறை தண்டனை அல்லது ஆயுள் தண்டனை விதிக்கப்படலாம். பிரிவு 154–ன் படி பயணிகளின் பாதுகாப்புக்கு ஆபத்தை விளைவிக்கும் செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு சிறை தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்படும்.



## சினிமா துளிகள்..!

# விஜய்க்கு சொன்ன கதையில் நடிக்கும் சூர்யா!



கருப்பு படத்தின் கதையை முதன் முதலில் கடந்த 2023ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில், நடிகர் விஜய்யிடம் தான் ஆர். ஜே. பாலாஜி கூறியுள்ளார்.

இந்த கதையின் மையக்கரு விஜய்க்கு மிகவும் பிடித்து போனதால், உடனடியாக படப்பிடிப்பை தொடங்க முடியுமா என்றும், தனது வழக்கமான ஸ்டைலில் இதை ஒரு லைட்டான ஃபேமிலி என்டர்டெயினராக எடுக்க முடியுமா என்றும் விஜய் கேட்டுள்ளார்.

ஆனால், திரைக்கதையை முழுமையாக எழுதி முடிக்க தனக்கு மேலும் கூடுதல் கால அவகாசம் தேவை என்று ஆர்.ஜே. பாலாஜி விஜய்யிடம் கூறியுள்ளார். இதற்கிடையில் நடிகர் விஜய் தனது அரசியல் பயணத்தில் தீவிரமாக கவனம் செலுத்த தொடங்கியதால் இந்த திட்டம் அப்படியே கைவிடப்பட்டது.

அதன் பின்னர், அந்த கதையில் சில தேவையான மாற்றங்களை செய்து, சுமார் 40 நிமிட கதையை மட்டும் நடிகர் சூர்யாவிடம் சென்று பாலாஜி விவரித்துள்ளார்.

கதையை கேட்டவுடன் சூர்யாவிற்கு மிகவும் பிடித்துப்போகவே, அவர் உடனடியாக படப்பிடிப்பிற்கு சம்மதம் தெரிவித்துள்ளார். தளபதி விஜய் நடிக்க வேண்டிய கதையில் தான் தற்போது சூர்யா நடித்துள்ளார் என்ற இந்த தகவல் தற்போது சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.





# அனல் பறக்கும் தேர்தல் களம்..!





## தேர்தலில் இருந்து பின்வாங்கிய முன்னாள் அமைச்சர் பொன்முடி?

சென்னை, மார்ச். 23–

சட்டமன்றத் தேர்தலில், திமுக முன்னாள் அமைச்சர் பொன்முடி போட்டியிடப் போவதில்லை என தகவல் வெளியாகி உள்ளது.

விழுப்புரம் மாவட்டத்திற்கு உட்பட்ட சட்டமன்றத் தொகுதிகளில் போட்டியிட விருப்ப மனு அளித்தவர்களுக்கு சென்னை அண்ணா அறிவாலயத்தில் நேர்காணல் நடைபெற்றது. இதில், திருக்கோவிலூர் எம்.எல்.ஏ.வும், முன்னாள் அமைச்சருமான பொன்முடி விருப்ப மனு அளிக்காதது தெரியவந்துள்ளது.

இதன் மூலம், எதிர்வரும் சட்டமன்றத் தேர்தலில், பொன்முடி போட்டியிடப் போவதில்லை என தகவல் வெளியாகி உள்ளது.

கடந்த 1989–ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல் முதல் 2021 ஆம் ஆண்டு வரை அனைத்து தேர்தல்களிலும் போட்டியிட்ட பொன்முடி 6 முறை வெற்றி பெற்று, 2 முறை தோல்விகளை சந்தித்தார். மேலும், 3 முறை திமுகவின் அமைச்சரவையில் முக்கிய துறைகளை கவனித்து வந்த பொன்முடி, சர்ச்சைக்குரிய கருத்துகளை பேசியதால், அமைச்சர் பதவியில் இருந்து நீக்கப்பட்டார்.2026 தேர்தலில் போட்டியிட பொன்முடி விருப்ப மனு அளிக்காத நிலையில், அவர் கடந்த தேர்தலில் போட்டியிட்ட திருக்கோவிலூர் தொகுதியில், அவரது மகன் கௌதம் சிகாமணி விருப்ப மனு அளித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## பவர் ஸ்டாரின் அண்ணா வளர்ச்சி கழகம் (AVK) விஜய்க்குப் போட்டியாகப் புதிய கட்சி!



சென்னை, மார்ச். 23–

தமிழக அரசியலில் நடிகர் விஜய்யின் தமிழக வெற்றி கழகம் (TVK) மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி வரும் நிலையில், நகைச்சுவை நடிகர் பவர் ஸ்டார் சீனிவாசன் தனது புதிய அரசியல் கட்சியான " அண்ணா வளர்ச்சி கழகம் " (AVK) குறித்த அறிவிப்பை வெளியிட்டுப் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார்.

**விஜய்க்கு நேரடி சவால்?**

பவர் ஸ்டார் சீனிவாசன் சமீபத்தில் அளித்த பேட்டியில், நடிகர் விஜய்யைத் தனது தம்பியாகக் கருதினாலும், அரசியல் களத்தில் அவர் தனக்குப் போட்டிதான் என்று அறிவித்துள்ளார். "விஜய் TVK என்றால், நான் AVK (அண்ணா வளர்ச்சி கழகம்)" எனப் பெயரளவில் ஒற்றுமை ப்படுத்தி அவர் விடுத்துள்ள சவால் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

**அண்ணா வளர்ச்சி கழகம் (AVK) – பின்னணி**

பேறறிஞர் அண்ணா மற்றும் எம்.ஜி.ஆரின் கொள்கைகளைப் பின்பற்றி, தமிழகத்தின் வளர்ச்சியை முன்னிறுத்தப்போவதாக அவர் தெரிவித்துள்ளார்.

பதிவு மற்றும் சின்னம்: தனது கட்சியைத் தேர்தல் ஆணையத்தில் விரைவில் பதிவு செய்ய உள்ளதாகவும், 2026 சட்டமன்றத் தேர்தலில் 234 தொகுதிகளிலும் தனித்துப் போட்டியிடத் தயாராக இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

**அரசியல் அனுபவம்**

இதற்கு முன்னதாகப் பவர் ஸ்டார் பாஜக (BJP), இந்திய ஜனநாயக கட்சி (IJK) உள்ளிட்ட பல கட்சிகளில் இணைந்து பணியாற்றியுள்ளார். 2019 மக்களவைத் தேர்தலில் தென் சென்னை தொகுதியில் போட்டியிட்டுத் தோல்வியடைந்ததும் குறிப்பிடத்தக்கது.

**விஜய் குறித்த விமர்சனம்**

விஜய் தனது மேடைப் பேச்சுகளில் வீரபாண்டிய கட்டபொம்மன் பாணியில் வீர வசனங்கள் பேசுவதாகக் குறிப்பிட்ட பவர் ஸ்டார், "வசனங்கள் மட்டும் போதாது, மக்களுக்கான கொள்கைகள் என்ன என்பதை விஜய் தெளிவாக விளக்க வேண்டும்" என்று வலியுறுத்தியுள்ளார். மேலும், விஜய் எங்குப் போட்டியிட்டாலும் அவரை எதிர்த்துப் போட்டியிடத் தான் தயார் என்றும் அவர் அறிவித்துள்ளார்.

**பிரபலத்திலிருந்து அரசியலுக்கு இமேஜ் அரசியல்**

பவர் ஸ்டார் சீனிவாசன் தனது நகைச்சுவை மற்றும் வைரல் இமேஜை அரசியல் ஆதரவாக மாற்ற முயற்சி செய்து வருகிறார். சமூக வலைதளங்களில் அவருக்கு இருக்கும் கவனம், ஆரம்ப கட்டத்தில் கட்சிக்கான அறிமுகத்தை வேகமாக அதிகரிக்க உதவலாம். ஆனால், அதனை நிலையான வாக்குகளாக மாற்றுவது தான் அவருக்கு பெரிய சவாலாக இருக்கும்.

**திமுக ஆதரவு சிக்னல் ?**

பவர் ஸ்டார் திமுகவுக்கு ஆதரவு அளிப்பதாக கூறியிருப்பது, அவரது அரசியல் நிலைப்பாட்டில் ஒரு முக்கிய மாற்றமாக பார்க்கப்படுகிறது. இது நேரடி கூட்டணியா அல்லது தற்காலிக அரசியல் நிலைப்பாடா என்ற கேள்வி எழுந்தாலும், திமுகவின் வாக்கு வங்கியை அணுகும் முயற்சியாக இதை அரசியல் வட்டாரங்கள் மதிப்பிடுகின்றன.

**தனிக்கட்சி**

ஒருபுறம் AVK என்ற தனிக்கட்சியை உருவாக்கி போட்டியிடத் தயாராக இருப்பதோடு, மறுபுறம் திமுகவுக்கு ஆதரவு தெரி விப்பது இரட்டை அரசியல் தந்திரமாகக் கருதப்படுகிறது. இது, தேர்தல் முடிவுகளுக்கு பிறகு கூட்டணி அரசியலில் இடம் பெறுவதற்கான முன்னோட்டமாக இருக்கலாம்.

## புதுச்சேரி வேட்பாளர்கள் பட்டியலை வெளியிட்ட அ.இ.பு.த.ம.மு.க!




புதுச்சேரி, மார்ச். 23–

அ.இ.பு.த.ம.மு.க சார்பில் புதுச்சேரி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் பட்டியலை கட்சியின் பொதுச்செயலாளர் சசிகலா வெளியிட்டார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

அனைத்திந்திய புரட்சித்தலைவர் மக்கள் முன்னேற்றக் கழக ஆட்சி மன்றக் குழு பரிசீலித்து எடுத்த முடிவின்படி, 09.04.2026 அன்று நடைபெற உள்ள புதுச்சேரி மாநில சட்டமன்றப் பேரவை பொதுத் தேர்தலில், அனைத்திந்திய புரட்சித்தலைவர் மக்கள் முன்னேற்றக் கழகத்தின் அதிகாரப்பூர்வ வேட்பாளர்களாகக் கீழ்கண்டவர்கள் கீழ்க்காணும் சட்டமன்றத் தொகுதிகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு நிறுத்தப்படுகிறார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**புதுச்சேரி மாநிலம்**

1.நெட்டப்பாக்கம் (தனி) (22): Dr. K. சிலம்பரசன்

2. வில்லியனூர் (5) : திரு. M. நந்தகோபால்

3. உழவர்கரை (6) : திருமதி. M.U. லாவண்யா

4. இந்திரா நகர் (8) : திரு. S. ஜெயபால் (எ) செங்கேணி

இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

## எதிர்ப்பு தெரிவித்தவர்களை நேரில் அழைத்து ராமதாஸ் டோஸ்!



சென்னை, மார்ச். 23–

சசிகலாவுடன் கூட்டணியை ஏற்க மாட்டோம் என அருள் எம்எல்ஏ கூறியதால், ராமதாஸ் கடும் அதிர்ச்சியடைந்தார். தனக்காக உயிரையே கொடுப்பேன் என்று கூறியவர், தனது முடிவுக்கு எதிர்ப்பு தெரிவித்ததால் ராமதாஸ் அப்செட்டில் உள்ளாராம். சொந்த மகனே தனக்கு எதிராக போய் விட்ட நிலையில், இவர்கள் எல்லாம் அப்படித்தான் இருப்பார்கள் என நெருக்கமானவர்களிடம் கூறி தனது மனதை ராமதாஸ் தேற்றிக்கொண்டாராம்.

அதோடு கூட்டணிக்கு எதிர்ப்பு தெரிவித்த 9 பேரை, நேரில் அழைத்து விவரத்தை எடுத்து சொல்லியிருக்கிறார். அப்போது, "தேர்தலில் போட்டியிடுவதாக கூறி நேர்காணலில் கலந்து கொண்டவர்கள் தேர்தலில் நிற்கலாம். போட்டியிட விருப்பம் இல்லை என்றால், நிறுத்தப்படும் வேட்பாளருக்கு ஆதரவு கொடுக்க வேண்டும். வெற்றி பெறுவதற்கான அனைத்து வேலைகளையும் செய்ய வேண்டும். அப்படி செய்யவில்லை என்றால், தேர்தல் முடியும் வரை தேர்தல் சுற்றுலா செல்லலாம். ஆன்மிக பயணம் சென்று விடுங்கள்" என்று எச்சரித்து உள்ளார்.

## பாஜகவில் இருந்து விலகிய சாய் சரவணன் குமார், திருபுவனை தொகுதி தவெக வேட்பாளராக அறிவிப்பு!



புதுச்சேரி, மார்ச். 23–

புதுச்சேரியில் போட்டியிடும் 30 பேர் கொண்ட த.வெ.க. வேட்பாளர் பட்டியலை விஜய் வெளியிட்டார். விசில் சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர்களை வெற்றி பெறச் செய்யவேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார்.

இந்நிலையில், புதுச்சேரி பாஜகவில் இருந்து நேற்று காலையில் விலகிய சாய் சரவணன் குமார், இரவில் திருபுவனை தொகுதி தவெக வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

2021–ல் பாஜக சார்பில் வென்ற இவர், 2025 ஜூன் வரை முதலமைச்சர் ரங்கசாமியின் அமைச்சரவையில் பதவி வகித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சென்னையில் தமிழ்நாடு பாஜக தேர்தல் பொறுப்பாளர் பியூஷ் கோயலை சந்தித்தார் தமாகா தலைவர் ஜி.கே.வாசன்!



சென்னை , மார்ச். 23–

சென்னையில் நட்சத்திர விடுதியில் தமிழ்நாடு பாஜக தேர்தல் பொறுப்பாளர் பியூஷ் கோயலை தமாகா தலைவர் ஜி.கே.வாசன் சந்தித்தார். தொகுதிப்பங்கீடு குறித்து கூட்டணிக் கட்சித் தலைவர்களை சந்தித்து வருகிறார் பியூஷ் கோயல். தேசிய ஜனநாயக கூட்டணி தொகுதிப் பங்கீடு இன்று இறுதி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## வாக்காளர் பட்டியலில் பெயர் விடுபட்டு இருப்பின், பெயர் சேர்க்க மார்ச் 26 வரை மட்டுமே அவகாசம்: தேர்தல் ஆணையம்!




டெல்லி, மார்ச். 23–

வாக்காளர் பட்டியலில் பெயர் விடுபட்டு இருப்பின், பெயர் சேர்க்க மார்ச் 26 வரை மட்டுமே அவகாசம் என தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. இறுதி வாக்காளர் பட்டியலில் பெயர் இடம்பெற்றிருந்தால் மட்டுமே சட்டமன்ற தேர்தலில் வாக்களிக்க முடியும். தகுதியானவர்கள் அனைவரும் வாக்காளர்களாக பதிவு செய்து ஜனநாயக கடமையாற்ற ஆணையம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

## தேர்தல் விதிகளை மீறி பரிசுப்பொருள் விநியோகம்: தவெக மாவட்டச் செயலாளர் மீது வழக்குப்பதிவு!



சேலம், மார்ச். 23–

தேர்தல் விதிகளை மீறி பரிசுப்பொருள் விநியோகம் செய்தது தொடர்பாக தவெக சேலம் மத்திய மாவட்டச் செயலாளர் பார்த்திபன் மீது காவல் துறை வழக்குப்பதிவு செய்துள்ளது.

இப்தார் நோன்பு திறப்பு நிகழ்ச்சியின்போது பொதுமக்களுக்கு பரிசுப் பொருட்களை வழங்கியதாக புகார் கூறப்படுகிறது. ரம்ஜான் பண்டிகை நாளில் தவெக சின்னம். கொடிகளுடன் தண்ணீர் பாட்டில் விநியோகித்ததாகவும் குற்றம் சாட்டப்படுகிறது.

## உச்சக்கட்ட கோஷ்டி பூசல்: புதுச்சேரி காங் தலைவர் வைத்திலிங்கம் வீடு முற்றுகை!



புதுச்சேரி, மார்ச். 23–

புதுச்சேரி காங்கிரஸ் தலைவர் வைத்திலிங்கம் வீட்டை முற்றுகையிட்டு நாராயணசாமி ஆதரவாளர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். புதுச்சேரி காங்கிரஸ் கட்சியில் கோஷ்டி பூசல் காரணமாக தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தையில் இழுபறி நீடித்து வருகிறது. புதுச்சேரி முதலமைச்சர் வேட்பாளராக வைத்திலிங்கத்தை முன்னிறுத்த ராகுல்காந்தி திட்டமிட்டிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.வைத்திலிங்கத்தை முன்னிறுத்துவதற்காக ஏற்கெனவே முதலமைச்சராக இருந்த நாராயணசாமிக்கு வாய்ப்பு மறுப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேட்புமனுத் தாக்கல் இன்றுடன் முடியும் நிலையில் காங். கோஷ்டி பூசலால் போட்டியிடும் தொகுதிகள் கூட அறிவிக்கப்படவில்லை. 5 ஆண்டு முதலமைச்சராக இருந்த நாராயணசாமி கடந்த தேர்தலில் போட்டியிடாமல் ஒதுங்கிவிட்டார். தற்போது திடீரென தேர்தலில் போட்டியிட நாராயணசாமி முயற்சிப்பதால் புதுச்சேரி காங்கிரசில் குழப்பம் நீடித்து வருகிறது. புதுச்சேரியில் இன்றுடன் வேட்புமனுத்தாக்கல் நிறைவடைய உள்ள நிலையில் காங்கிரசில் குழப்பம் நீடித்து வருகிறது. இதனிடையே புதுச்சேரி காங்கிரஸ் தலைவர் வைத்திலிங்கம் வீட்டை முற்றுகையிட்டு நாராயணசாமி ஆதரவாளர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். நெல்லித்தோப்பு பகுதியில் போட்டியிட நாராயணசாமிக்கு சீட் மறுத்ததால் வைத்திலிங்கம் வீட்டை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தி வருகின்றனர். வைத்திலிங்கத்துக்கு எதிராகவும் கண்டன முழக்கங்களையும் எழுப்பி நாராயணசாமி ஆதரவாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

## திமுகவுக்கு தாவுகிறாரா செம்மலை?



சென்னை, மார்ச். 23–

அதிமுகவின் அமைப்பு செயலாளராக இருப்பவர் செம்மலை (80). 1980ம் ஆண்டு சேலம் தாரமங்கலம் தொகுதியில் சுயேட்சையாக களம் இறங்கி வெற்றி பெற்றவர். பின்னர் அதிமுகவில் இணைந்தார். ஓமலூர், மேட்டூர் சட்டமன்ற தொகுதிகளில் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளார். கல்வித்துறை மற்றும் சுகாதாரத்துறை அமைச்சராகவும் பணியாற்றியுள்ளார். சேலம் நாடாளுமன்ற தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

அதிமுகவில் ஜெயலலிதாவின் மறைவுக்கு பிறகு, கூவத்தூரில் சசிகலா தலைமையில் எம்எல்ஏக்கள் ஒன்று கூடி, சசிகலாவை முதல்வர் வேட்பாளராக தேர்வு செய்தனர். சொத்து குவிப்பு வழக்கில் சசிகலாவுக்கு 4 ஆண்டு சிறை தண்டனை கிடைத்தவுடன், எடப்பாடி பழனிசாமியை முதல்வர் வேட்பாளராக தேர்வு செய்தனர். இதனால் கடும் அதிர்ச்சியடைந்த செம்மலை, எனது தொகுதி மக்களிடம் கேட்டு விட்டு வருகிறேன் என கூறிக்கொண்டு, கூவத்தூரில் இருந்து தப்பி வெளியே வந்தார். அதன்பிறகு ஓ.பன்னீர்செல்வம் அணியில் இணைந்து பணியாற்றினார்.

பின்னர் அங்கிருந்து வெளியே வந்த செம்மலை, எடப்பாடி பழனிசாமி அணியில் சேர்ந்து கொண்டார். இனிமேல் தேர்தலில் போட்டியிட போவதில்லை என்பதில் உறுதியாக இருந்த அவர், மேல்சபை எம்பி பதவி கிடைத்தால் சிறப்பாக பணியாற்றுவேன் என கூறிவந்தார். 2 முறை நடந்த மேல்சபை எம்பி தேர்தலை எதிர்நோக்கியிருந்தார்.

ஆனால் எடப்பாடி பழனிசாமி அவரை கண்டுகொள்ளவில்லை. சமீபத்தில் நடந்த மேல்சபை தேர்தலில் தனக்கு சீட் கிடைக்கும் என்பதில் உறுதியாக இருந்தார். ஆனால் அதுவும் கைநழுவி போனது. இந்நிலையில் செம்மலை திமுகவுக்கு செல்ல இருக்கிறார் என்ற தகவல் சமூகவலைதளங்களில் வேகமாக பரவியது. இதுகுறித்து அவரிடம் கேட்டபோது, "எனக்கு வேண்டாதவர்கள் கிளப்பிவிட்ட புரளி" என்றார்.

## விளையாடனும்னா பேரக்குழந்தையோட விளையாடுங்க.... ராமதாஸ், சசிகலாவை கலாய்த்த நாதக!



சென்னை, மார்ச். 23–

நாம் தமிழர் கட்சி சார்பில் கன்னியாகுமரி சட்டமன்றத் தொகுதி பொதுக் கூட்டம் ஆரல்வாய்மொழி சந்திப்பில் நடந்தது. இதில் மாநில கொள்கை பரப்புச் செயலாளர் சாட்டை துரைமுருகன் பேசியதாவது: பொதுமக்களை பாதுகாப்பதாகவும், நடிப்புத் தொழிலை விட்டுவிட்டு மக்களுக்காக வந்ததாகவும் விஜய் சொல்கிறார். பத்திரிகையாளரை சந்திக்காத ஒரு தலைவர் எப்படி பொதுமக்களை சந்தித்து குறைகளை தீர்க்கப் போகிறார். விஜய் தனித்து நிற்கவில்லை.

தனித்து விடப்பட்டிருக்கிறார். ஒரு கட்சியில் ஒருத்தன் முட்டாளாக இருக்கலாம். ஒரு கட்சியே முட்டாளாக இருந்தால் என்ன செய்வது?. தற்போது ராமதாஸ், சசிகலா கூட்டணி வைக்கிறார்கள். உங்களுக்கு விளையாட வேண்டுமென்றால் வீட்டில் உள்ள பேரக் குழந்தைகளுடன் விளையாடுங்கள். தமிழ்நாட்டு மக்களுடன் விளையாட வேண்டாம். எனவே மக்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டும் என்றார்.

## பாஜக மீது அதிருப்தியில் உள்ள சரத்குமாருடன் நயினார் நாகேந்திரன் சந்திப்பு!



சென்னை, மார்ச். 23–

சென்னை தியாகராயர்நகரில் உள்ள தனியார் மண்டபத்தில் தன்னுடைய ஆதரவாளர்கள், ரசிகர் மன்ற நிர்வாகிகள் பாரதிய ஜனதா கட்சியில் உள்ள தன்னுடைய ஆதரவாளர்களுடன் ஆலோசனை நடத்தினர்.

இந்த கூட்டத்தில், கட்சியில் இணைந்து 2 வருடமாகியும் எந்தவித பதவியும் பா.ஜ.க கொடுக்கவில்லை என்று சரத்குமார் தனது வேதனையை பதிவு செய்தார். அதனை தொடர்ந்து சரத்குமார் செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசுகையில், "நான் பாரதிய ஜனதா கட்சியில் இருந்து விலக போவதாக பல செய்திகள் வந்தது. இந்த நிகழ்வில் எனக்கு இதுவரை ஏன் எந்தவொரு பொறுப்பும் வழங்கவில்லை என்ற ஆதங்கத்தை என்னுடைய ஆதரவாளர்கள் பதிவு செய்தார்கள்.

பொறுப்புகள் கேட்ட எல்லாருக்கும் கொடுத்திருக்கிறார்கள். 19 மாநில நிர்வாகிகள் மாவட்ட ரீதியாக பொறுப்புகள் கொடுக்க வேண்டிய சூழலிலும் தேர்தல் வர நேரத்தில், எங்களுக்கு எந்த ஒரு பொறுப்பும் இல்லாவிட்டால் எப்படி செயல்பட முடியும்? என்ற ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்கள். பாஜகவில் மாநிலத்திலும் மத்தியிலும் அதிகாரம் கேட்போம். இதுதொடர்பாக பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் மற்றும் பாஜக தலைமைக்கு கடிதம் எழுத உள்ளேன். பாஜகவின் மேடைகளில் எனது புகைப்படத்தை கூட வைக்காததால் ஆதரவாளர்கள் ஆதங்கத்தில் இருக்கின்றனர். கட்சி இணைப்பின்போது பாஜக கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றவில்லை. எனது அதிருப்தியை பாஜக தலைமையிடம் தெரிவித்துள்ளேன்" என்று கூறியிருந்தார். பாஜக மீதான தனது அதிருப்தியை சரத்குமார் வெளிப்படையாக காட்டியது அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்த நிலையில்,தமிழக பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரனை சரத்குமார் சந்தித்து பேசியுள்ளார். சென்னை தியாகராய நகரில் உள்ள இல்லத்தில் இந்த சந்திப்பு நடைபெற்றது. இந்த சந்திப்புக்கு பிறகு செய்தியாளர்களிடம் பேசிய சரத்குமார், எனது ஆதங்கம் குறித்து கேட்டறிந்து பரிசீலனை செய்வதாக நயினார் நாகேந்திரன் கூறினார். என்று தெரிவித்தார்.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020